கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

# பால்வளம்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2008–2009

# கோரிக்கை எண் 8

<u>பொருளடக்கம்</u>


| வ.எண் | தலைப்பு |
| --- | --- |
| 1. | முன்னுரை |
| 2. | பால்வளத்துறையின் குறிக்கோள்கள் |
| 3. | குறிக்கோள்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
| 4. | பால் கூட்டுறவுத்துறை மற்றும் கூட்டுறவு பணியாளர்கள் நலன் |
| 5. | பால்வளத்துறையின் வளர்ச்சி |
| 6. | மத்திய அரசு திட்டங்கள் |
| 7. | தரமான தூய பால் உற்பத்திக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் |
| 8. | மாநில அரசுத் திட்டங்கள் |
| 9. | தொலைநோக்கு திட்டம் 2008–09 |
| 10. | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை |

# பால்வளத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2008–09

**முன்னுரை**

பால்வளம், தமிழகத்தில் சீரான பொருளாதார மாற்றங்களை உருவாக்கி, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. பெரும்பாலான பால் உற்பத்தியாளர்கள் சிறிய, நடுத்தர மற்றும் ஏழை விவசாயிகள் ஆவர். பால்வளம் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கி கிராம மக்களின் வறுமையை நீக்குகிறது. பால்வளம் ஆண்டு முழுவதும் நிலையான வருமானம் தந்து கிராம மக்களின், குறிப்பாக கிராமப்புற பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. கூட்டுறவு அமைப்புகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், பால் கொள்முதல் விலையாக சராசரியாக நாளொன்றுக்கு ரூ.262 இலட்சம் (ஆண்டுக்கு ரூ.95,630 இலட்சம்) பெறுகின்றனர். இதன் வாயிலாக கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் இத்துறையின் பங்களிப்பு தெரிய வருகின்றது.

இந்தியா உலகிலேயே அதிகமாக பால் உற்பத்தி செய்யும் நாடாக விளங்குகிறது. பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது. மொத்த வருவாய் கிராமங்களில் 50 விழுக்காடுக்கு மேற்பட்ட கிராமங்களில் பால் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து முதல் இடத்தை தமிழகம் பெற்றுள்ளது. 22.10 இலட்சம் உறுப்பினர்கள் அடங்கிய 7833 பிரதம பால் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

2007–08 ஆம் ஆண்டில், கூட்டுறவு அமைப்புகளின் பால் கொள்முதல், சராசரியாக நாளொன்றுக்கு 26.27 இலட்சம் லிட்டர் ஆகும். பால் கூட்டுறவு வரலாற்றிலேயே அதிகபட்சமாக 21.06.2007 அன்று 29.40 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, பால்வளத்துறை சாதனை படைத்துள்ளது. தமிழகத்தில் பால் விற்பனையில், கூட்டுறவுகளின் சந்தைப் பங்களிப்பு உயர்ந்து தமிழகத்தின் சந்தைப் பங்களிப்பில் ‘ஆவின்’ பெரும்பங்கு வகிக்கிறது.

**பால் வளத்துறை**

தமிழகத்தில் 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பால்வளத்துறையின் இன்றைய வளர்ச்சி, சிறப்பானது மற்றும் குறிப்பிடத்தக்கது. 01.08.1965 முதல் பால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள், பால்வளத்துறைக்கு மாற்றப்பட்டது. பால் வளத்துறை ஆணையர், இத்துறையின் முதன்மை அலுவலராகவும். சங்கங்களின் செயல் பதிவாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநராகவும் இருந்து வருகிறார். தவிர மாநில அளவில் பால் மற்றும் பால் பொருட்களின் ஆணை 1992–ன் கீழ் மாநில பதிவு அதிகாரியாகவும் இருந்து வருகிறார்.

புதிய சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், தண்டவசூல் நடவடிக்கை எடுத்தல், தேர்தல் நடத்துதல், நிர்வாக குழு அமைத்தல் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சங்கங்களுக்கு ஆணைகள் பிறப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள் 1988–ன்படி செயல்படுத்தி வருகின்றார்.

\

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களின் சட்டரீதியான பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு, துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் மாவட்டவாரியாக நியமிக்கப்பட்டுள்ள 23 துணை பதிவாளர் (பால்பதம்) ஆகியோர் உதவியாக உள்ளனர்.

**பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்**

தமிழகத்தில் 7833 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளில் 1309 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 59 பிரதம பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அடங்கும். 2007–08 ஆம் ஆண்டில் 364 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 129 சங்கங்கள் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகும்.

பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் பொருட்டு, விவசாயிகளை பால் உற்பத்தியாளர்களாக்கும் திட்டங்களை செயல்படுத்துவதுடன் உயர்ரக கலப்பின கறவையினங்களை உருவாக்க, தொலை நோக்கு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் அங்கத்தினராகவும் உள்ளதால், சங்கங்கள் இலாபம் ஈட்டும்பொழுது, உறுப்பினர்களுக்கு ஈவுத்தொகை, போனஸ் மற்றும் கூடுதல் கொள்முதல்விலை ஆகியவை வழங்கப்படுகின்றன. சங்கங்கள் ஈட்டும் இலாபம் உறுப்பினர்களுக்கே மீண்டும் சென்றடைவது, கூட்டுறவு சங்கங்களின் தனிச் சிறப்பாகும். தனியார் நிறுவனங்களைப் போலன்றி, சங்கங்கள் ஈட்டும் இலாபம், உற்பத்தியாளர்களை சென்றடைவதால், உற்பத்தியாளர்களுக்கும் சங்கங்களுக்கும் இடையே நல்லுறவு நீடிக்கிறது.

**மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்**

தமிழகத்தில் 31 மாவட்டங்களை உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்தந்த மாவட்டங்களின் ஆட்சியர் ஒன்றியத்தின் தனி அலுவலராக செயல்பட்டு வருகின்றனர். சங்கங்கள் ஒன்றியங்களை சார்ந்த உறுப்பினர்களாக செயல்படுகின்றன. தூய பால் உற்பத்தி வழிமுறைகளை பின்பற்றி, சங்கங்களில் பால் கொள்முதல் செய்தல், தரத்தின் அடிப்படையில் பால்பணம் வழங்குதல், கால்நடைகளை பராமரித்தல், கால்நடைகளின் நலன் பேணுதல், கால்நடை தீவனம் மற்றும் பசும் புல் வழங்குதல், பால் உற்பத்தியாளர்கள் நலனை கருத்தில் கொண்டு மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், மாவட்ட அளவில் பால் விற்பனை செய்தல், சென்னைக்கு தேவையான பாலை அனுப்புதல் மற்றும் உபரிபாலிருந்து கொழுப்பு நீக்கி, மரபு மற்றும் மதிப்புக்கூட்டிய பால் உபபொருட்களை தயாரித்தல் ஆகியவை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் முக்கிய பணிகளாகும்.

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமை நிறுவனமாகும். இணையம் 01.02.1981 ஆம் நாளில் நிறுவப்பட்டது. இணையத்தின் மூன்று பால்பண்ணைகள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. மாநகர பால்பண்ணைகள், கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து பாலினைப் பெற்று பதப்படுத்தி பால்பைகளில் நிரப்பி சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி

\

வைக்கின்றன. அம்பத்தூரிலுள்ள நான்காவது பால்பண்ணையில் பால் உபபொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

**பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 1992**

நுகர்வோர்க்கு தேவையான தரமான மற்றும் சரியான அளவுடன் பால் கிடைக்க செய்ய வேண்டும் பொருட்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955 பிரிவு 3ன் கீழ், மத்திய அரசு, பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 1992ஐ அமுல்படுத்தியுள்ளது.

தமிழகத்தில், செயல்பட்டு வருகின்ற அனைத்து தனியார் பால்பண்ணைகளும், அரசு பால்பண்ணைகளும், நாளொன்றுக்கு 10000 லிட்டர் பால் அல்லது பால் பொருட்களிலுள்ள மொத்த சத்து வருடத்திற்கு 500 மெட்ரிக்டன்னுக்கு மேலாக கையாளும்பொழுது, அவை பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 1992ன்கீழ் பதிவு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

ஆணையர் அவர்கள் நேரடி கட்டுப்பாட்டில், துணை பால் ஆணையர் (கூட்டுறவு), அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் 23 சரக துணை பதிவாளர் (பால்பதம்) ஆகியோருக்கு பதிவு பெற்ற பால்பண்ணைகளின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், காலமுறை ஆய்வினை மேற்கொள்ளவும், பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 1992ஐ அமுல்படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய உற்பத்தியாளர் கழகம் (National Productivity Council) மற்றும் இந்திய ஏற்றுமதி கழகம் (Export Council of India) ஆகியனவும் இச்சட்டத்தின்கீழ் சோதனை செய்ய அதிகாரம் பெற்றிருக்கின்றன.

பால் உற்பத்தியை பெருக்குவதோடு, நுகர்வோருக்கு தரமான பாலை விநியோகம் செய்யும் நோக்குடன் மத்திய அரசின் மானியத்தில் ஆரம்பிக்கப்பட்ட தரக்கட்டுப்பாட்டு பரிசோதனைக்கூடம், பால்வளத்துறை ஆணையர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில் சென்னை மாதவரம் பால்பண்ணையில் இயங்கி வருகிறது. தரமான பாலை விற்பனை செய்வதினை உறுதி செய்யும் நோக்குடன் 1210 பால் மற்றும் பால் உபபொருட்கள் மாதிரிகள் இங்கு பரிசோதிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையின் கீழ் நாளொன்றுக்கு 72.60 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட 37 பால்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**பால்வளத்துறையின் குறிக்கோள்கள்**

1) பால் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க உத்தரவாதம் அளித்தல்.
2) பால்பண்ணை செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
3) அமைப்பு சாரா பால் தொழிலை ஒருங்கிணைந்த அமைப்புச்சார்ந்த தொழிலாக படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
4) நுகர்வோருக்கு பதப்படுத்தப்பட்ட, உணவு பாதுகாப்பு வழிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட தரமான தூய பால் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல்.
5) நுகர்வோருக்கு நிர்ணயிக்கப்பட்ட தரக் குறியீட்டுடன் சரியான அளவுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்கச் செய்தல்.
6) பால்பண்ணை தொழிலில் நம்பிக்கை ஏற்படும் வகையில் வெளிப்படையான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

\

**குறிக்கோள்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

1) கறவை மாடுகளின் மேம்பாடு, பால் உற்பத்தி திறனை உயர்த்துதல் மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.

2) பால் உற்பத்தியாளர்களுக்கு சொந்தமான கறவைமாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை, தீவனம் வழங்குதல், காப்பீடு செய்தல் போன்ற மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துதல்.

3) அதிக தரமான பசும்புல் விளைவித்து பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்குதல்.

4) நவீன கால்நடை பராமரிப்பு மற்றும் நடைமுறை பயிற்சியினை கல்விச் சுற்றுலா மூலம் விவசாயிகளுக்கு அளித்து ஊக்குவித்தல்.

5) தூய பாலுற்பத்தி திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் பாலின் தரத்தை உயர்த்தும் பொருட்டு மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கையை அதிகரித்தல்.

6) துருவுறா எஃகினாலான பால் கேன்கள், பால் சேகரிக்கும் உபகரணங்கள், செயற்கைமுறை கரூவூட்டல் உபகரணங்கள், பால் பரிசோதனைக்கருவிகள் ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

7) சங்கபணியாளர்களுக்கு கூட்டுறவு பணியமைப்பு, முதலுதவி மற்றும் செயற்கைமுறை கரூவூட்டல் போன்ற பயிற்சிகளை அளித்தல்.

8) பால் உற்பத்தியாளர்களுக்கு,சரியான நேரத்திற்கு பால் பணம் பட்டுவாடா செய்வதை உறுதிப்படுத்துதல்.

9) குளிர்வூட்டப்பட்ட பாலை, பால் பதப்படுத்தும் பண்ணைக்கு பால் லாரிகள் மூலம் கொண்டு செல்லுதல்.

10) கூட்டுறவு பண்ணைகளின், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, தூய பால் மற்றும் பால் உபபொருட்களை தயாரித்து நுகர்வோருக்கு வழங்குதல்.

11) 'உணவுப்பாதுகாப்பு' கொள்கையை அமைப்புசார்ந்த பால்பண்ணைகளில் செயல்படுத்துதல்.

12) உபரியாக உள்ள பாலை, பால்பவுடர், வெண்ணெய் மற்றும் நெய் ஆகிய பால் உப பொருட்களாக மாற்றுதல்.

13) மதிப்பு கூட்டப்பட்ட பால் உபபொருட்களாகிய ஐஸ்கிரீம், குலோப்ஜாமூன், பன்னீர், பாலாடைக்கட்டி மற்றும் இதர பால் உபபொருட்களை தயாரித்தல்.

14) பால் உற்பத்தியை பெருக்குவதுடன், மத்திய / மாநில அரசின் நேரடியான மற்றும் பங்களிப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.

15) நலிவடைந்த பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு, நிதி உதவி அளித்து புனரமைத்தல்.

16) பால்வளத்துறை, இணையம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களுக்கு தேவையான மனித வளத்தினை கண்டறிந்து காலிப் பணியிடங்களை நிரப்புதல்.

17) பால்வளத்துறையின் அனைத்து பிரிவுகளையும் மின் ஆட்சி மயமாக்கி நிர்வாகத்தை திறம்படச் செய்தல்.

18) சீரிய முறையில் பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 1992ஐ அமுல்படுத்தி தரமான பால் மற்றும் பால் உபபொருட்கள் நுகர்வோர்களுக்கு கிடைக்க செய்தல்.

\

19) தகவல் அறியும் உரிமை சட்டம் 2005–ஐ சிறப்பாக அமுல்படுத்துவதன் மூலம் விழிப்புணர்வை அதிகரித்தல்.

**குறிப்பிடத்தக்க சாதனைகள் (2007–08)**

அ. பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி பால் கூட்டுறவு சங்கங்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக ரூ.418 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. பகுதி–2 திட்டத்தின்கீழ், பால்வளத்துறைக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இதுவே அதிகபட்ச தொகையாகும்.

ஆ. மொத்தம் உள்ள 7833 சங்கங்களில் உத்தேச நிதிநிலை அறிக்கையின்படி 7145 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

இ. 1500 பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களை சார்ந்த 320741 பால் உற்பத்தியாளர்களுக்கு, ஊக்கத்தொகை, போனஸ், கூடுதல் கொள்முதல் விலை மூலம் ரூ.524 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஈ. புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் பணத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வந்த, லிட்டருக்கு 50 பைசா பால்பணம் பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி 10.03.2008 முதல் நிறுத்தப்பட்டது.

உ. 364 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 129 மகளிர் சங்கங்கள் அடங்கும்.

ஊ. 178 செயலிழந்த சங்கங்கள் மீண்டும் புத்துயிர் ஊட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

எ. பால் கூட்டுறவு சங்கங்களின் வரலாற்றிலேயே 21.06.2007 அன்று அதிகபட்சமாக நாளொன்றுக்கு 29.40 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது..

**பால் உற்பத்தியாளர் நலன்**

1) ஒரே மாதிரியான பால் கொள்முதல் விலை.

2) தரமான மாட்டுத் தீவனங்களை உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்.

3) பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு, கால்நடைப் பராமரிப்புத்துறையின் உதவியுடன் நோய் தடுப்பு ஊசி போடுதல்.

4) கலப்பினக் கறவை மாடுகளை உருவாக்குதல்.

5) கால்நடை பராமரிப்புத்துறை உதவியுடன் ‘கால்நடை பாதுகாப்பு’ மற்றும் சிறப்பு மலடு நீக்கும் முகாம் திட்டங்களை முறையாக செயல்படுத்துதல்.

6) பால் உற்பத்தியாளர்களின், கலப்பின கறவைமாடுகளுக்கு காப்பீடு வசதி செய்தல். இத்திட்டம், கால்நடை மேம்பாட்டுக் கழகம் மூலம் வேலூர், கோயம்புத்தூர், சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

7) தகுதி வாய்ந்த பால் உற்பத்தியாளர்களை, அவர்களுக்குரிய நலன்களைப் பெறுவதற்காக வேளாண்மைத்துறை தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக சேர்த்தல்.

8) 30 கிலோ கால்நடைதீவன மூட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

9) பாலின் தரம் மற்றும் எடையை கணக்கிடுவதற்கு கணினியுடன் கூடிய பால் எடை / தரம் பார்க்கும் கருவி சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பால் கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு பணியாளர்கள் நலன்**

\

1) பாலுற்பத்தி மற்றும் பால்வள மேம்பாட்டுத்துறையில் காலியாக இருந்த 39 பணியிடங்கள் மற்றும் 170 இணைய மற்றும் ஒன்றிய பணியாளர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

2) மாவட்ட ஆட்சியரால் பணியமர்த்தப்பட்ட 7 தட்டச்சர்கள், தற்காலிக முறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

3) கருணை அடிப்படையில், பணிக்காலத்தில் மரணமடைந்த, பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பால்வளத்துறையில் 2 பணியிடங்களும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 74 பணியிடங்களும் அளிக்கப்பட்டுள்ளது.

4) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், பணியாற்றிய 202 தற்காலிக பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தப் பட்டுள்ளது.

5) இணையம் மற்றும் ஒன்றிய பணியாளர்களுக்கு, 8.33 சதவிகிதம் போனஸாகவும், 11.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும் ஆகமொத்தம் ரூ.597.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 7279 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

6) பால் கூட்டுறவு பணியாளர்களுக்கு, தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை பரிசாக ரூ.100.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 31729 பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

7) கூட்டுறவு அமைப்புகளின் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ. 317.79 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

8) இணையத்திற்கு, ‘‘கூட்டுறவு சங்க பணியாளர்களுக்குரிய சிறப்புத் துணைவிதிகள்’’ பதிவு செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

9) மாவட்ட ஒன்றிய பணியாளர்களுக்கான பணி விதிகளை உருவாக்குவதற்கு, அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது.

**நுகர்வோர் நலன்**

இணையம், நுகர்வோர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது. தரமான தூய பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. குறித்த நேரத்தில் பால் விநியோகம் செய்யப்படுகிறது. சென்னையிலுள்ள நந்தனத்தில் 24 மணி நேர நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 425 3300 மூலம் நுகர்வோர் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர்களுக்கு தரமான பால் விநியோகம் செய்யும் பொருட்டு தினமும் 16 மணி நேரம், பாலகங்கள் செயல்படுகின்றன. நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 2008 பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மாதந்திர பால் அட்டை வழங்குவதற்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

**பால்வளத்துறையின் வளர்ச்சி**

**மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்கள்**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 2380 செயற்கை முறை கருவூட்டல் மையங்களும், இதனைச் சார்ந்த 5053 சங்கங்களில் சுமார் 8 இலட்சம் கறவை மாடுகளும் உள்ளன. 2182 நடமாடும் செயற்கைமுறை கரூவூட்டல் நிலையங்கள் செயல்படுகின்றன.

\

13.70 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்பட்டு 4.66 இலட்சம் கலப்பினக் கன்றுகள் பிறந்துள்ளன.

4729 சங்கங்களுக்கு கால்நடை மருத்துவர்களால் கால்நடை பராமரிப்பு வசதி ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. 3036 சங்கங்களில் கால்நடை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

2007–08ல் 5.79 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அவசர கால சிகிச்சை பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் கீழ் 57 முழுநேர கால்நடை சிகிச்சை பிரிவுகளும். 55 அவசர கால சிகிச்சை பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

**அட்டவணை –I**

**முக்கிய தகவல்கள் (31.03.2008)**

| வ. எண் | விபரம் | |
|---|---|---|
| 1 | செயல்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் | 7833 |
| 2 | புதிதாக பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் | 364 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் | 22.10 இலட்சம் |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் | 4.08 இலட்சம் |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 26.27 இலட்சம் லிட்டர் |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலானஇணையம் | 1 |
| 8 | பதிவு செய்யப்பட்ட தனியார் பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 20 |
| 9 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 21.64 இலட்சம் லிட்டர் |
| 10 | பதிவு செய்யப்பட்ட தனியார் பால்பண்ணைகளின் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 18.60 இலட்சம் லிட்டர் |
| 11 | பதிவு செய்யப்பட்ட பால்பண்ணைகளின் மொத்த பால்கொள்முதல் (நாளொன்றுக்கு) | 40.24 இலட்சம் லிட்டர் |
| 12 | சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) | 10.36 இலட்சம் லிட்டர் |
| 13 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) | 9.85 இலட்சம் லிட்டர் |
| 14 | ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 15 |
| 15 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 4 |
| 16 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 19.42 இலட்சம் லிட்டர் |

\

| | | |
|---|---|---|
| 17 | இணையத்திலுள்ள பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 10.00 இலட்சம் லிட்டர் |
| 18 | பதிவு செய்யப்பட்ட தனியார் பால்பண்ணைகளின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 27.95 இலட்சம் லிட்டர் |
| 19 | செயல்படும் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 36 |
| 20 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 13.55 இலட்சம் லிட்டர் |
| 21 | செயல்படும் மொத்த பால் குளிர்விப்பான்கள் | 42 |
| 22 | மொத்த பால் குளிர்விப்பான்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) | 1.68 இலட்சம் லிட்டர் |
| 23 | பால் கொள்முதல் வழித்தடங்கள் | 487 |
| 24 | ஒன்றியங்களில் பால் வினியோக வழித்தடங்கள் | 230 |
| 25 | சென்னை மாநகர பால் வினியோக வழித்தடங்கள் | 81 |
| 26 | பால் பவுடர் பண்ணைகள் | 4 |
| 27 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (நாளொன்றுக்கு) | 70 மெட்ரிக் டன் |
| 28 | சென்னையில் உள்ள தானியங்கிப் பால் வினியோக நிலையங்களின் எண்ணிக்கை | 218 |

**பால் கொள்முதல்**

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 2006–07 மற்றும் 2007–08 ஆண்டுகளில் சராசரி பால் கொள்முதல் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-

**<u>அட்டவணை–II</u>**

**(நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2006–07 | 2007–08 |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்–திருவள்ளூர் | 54 | 48 |
| 2 | விழுப்புரம் | 167 | 165 |
| 3 | வேலூர் | 298 | 276 |
| 4 | தருமபுரி | 146 | 139 |
| 5 | சேலம் | 397 | 407 |
| 6 | ஈரோடு | 216 | 193 |
| 7 | கோயம்புத்தூர் | 219 | 208 |
| 8 | நீலகிரி | 20 | 22 |
| 9 | மதுரை | 208 | 227 |
| 10 | திண்டுக்கல் | 41 | 40 |
| 11 | திருச்சி | 298 | 286 |
| 12 | தஞ்சாவூர் | 28 | 34 |
| 13 | புதுக்கோட்டை | 11 | 11 |
| 14 | சிவகங்கை | 28 | 30 |
| 15 | விருதுநகர் | 12 | 11 |
| 16 | திருநெல்வேலி | 61 | 61 |
| 17 | கன்னியாகுமரி | 6 | 6 |
| | மொத்தம் | 2210 | 2164 |

\

2006–07 ஆம் ஆண்டில் 7662 கூட்டுறவு சங்கங்கள் மூலம் சராசரியாக நாளென்றுக்கு 26.10 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. 2007–08 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 7833 ஆக உயர்ந்து பால் உற்பத்தி சராசரியாக நாளொன்றுக்கு 26.27 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

2007–08 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பால் நாளொன்றுக்கு 21.64 இலட்சம் லிட்டர் ஆகும்.

**பால் கொள்முதல் விலை**

பசும்பாலின் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.2/–ம் எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.4/–ம் 10.03.2008 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் சென்னை மாநகர பால் விற்பனை**

மாவட்ட ஒன்றியங்களில் 2006–07 மற்றும் 2007–08 ஆண்டுகளில் சராசரியாக நாளொன்றுக்கு விற்பனைசெய்யப்பட்ட பாலின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

<u>அட்டவணை–III</u>

**( நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)**

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2006–07 | 2007–08 |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம்–திருவள்ளூர் | 1 | 1 |
| 2 | விழுப்புரம் | 25 | 31 |
| 3 | வேலூர் | 69 | 75 |
| 4 | தருமபுரி | 18 | 17 |
| 5 | சேலம் | 123 | 144 |
| 6 | ஈரோடு | 90 | 83 |
| 7 | கோயம்புத்தூர் | 182 | 176 |
| 8 | நீலகிரி | 21 | 21 |
| 9 | மதுரை | 156 | 185 |
| 10 | திண்டுக்கல் | 22 | 20 |
| 11 | திருச்சி | 103 | 102 |
| 12 | தஞ்சாவூர் | 21 | 22 |
| 13 | புதுக்கோட்டை | 6 | 6 |
| 14 | சிவகங்கை | 27 | 29 |
| 15 | விருதுநகர் | 6 | 7 |
| 16 | திருநெல்வேலி | 49 | 49 |
| 17 | கன்னியாகுமரி | 23 | 17 |
|  | **மொத்தம்** | **942** | **985** |
| 18 | சென்னை மாநகரில் பால் விற்பனை | **987** | **1036** |

\

| | | | |
|---|---|---|---|
| | ஆக மொத்தம் | 1929 | 2021 |

**சென்னை மாநகர பால் விற்பனை**

24 வட்டார அலுவலகங்கள், 516 பால் டிப்போக்கள், 364 பால் விற்பனை மையங்கள், 35 மொத்த பால் விற்பனையாளர்கள், 48 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுமார் 3000 சில்லரை விற்பனையாளர்கள் மூலமாகப் பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**2007–08 –ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிற நடவடிக்கைகள்**

**தரம் உறுதி செய்தல்**

சென்னை மாநகரத்தில் இயங்கும் மூன்று பால் பண்ணைகள், சேலம் மற்றும் ஈரோடு பால்பண்ணைகள் ஐ.எஸ்.ஓ. மற்றும் உணவு பாதுகாப்பு கொள்கை தரச் சான்றிதழ் (HACCP) பெற்றுள்ளது. நீலகிரி பால்பண்ணைக்கு, ஐ.எஸ்.ஓ. தர சான்றிதழ், 27.03.2007ல் வழங்கப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு கொள்கை தரச் சான்றிதழ் (HACCP) ஆவின் விற்பனை செய்யும் பால் மற்றும் பால் உபபொருட்களின் தரத்தினை உறுதி செய்கிறது. பாலை வெப்பம் கடத்தா வாகனங்கள் மூலம் (Insulated puffed vehicle) பால்பண்ணையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு நுகர்வோரை சென்றடையும் வரை பாலின் தரம் உறுதி செய்யப்படுகின்றது.

**கால்நடை தீவன உற்பத்தி**

நடப்பு ஆண்டில் 12013 மெட்ரிக்டன்கள் கால்நடைத்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**உறைவிந்து குச்சிகள் உற்பத்தி**

உதகையிலுள்ள ஜெர்சி மைய பொலிகாளைப் பண்ணை, ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் பெற்றுள்ளது. இந்திய அளவில் சிறப்பாக செயல்படும் பண்ணையாக மத்திய அரசின் மைய செயல்பாட்டு பிரிவினால் தேர்வு செய்யப்பட்டு 'A' தர சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 20.07 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அரசு 46.33 ஏக்கர் நிலத்தை கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைக்கு இலவசமாக ஒதுக்கியுள்ளது. பண்ணை நிலத்தை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு இலவசமாக வழங்கியதோடு குத்தகைத் தொகை மற்றும் நிலத்தின் விலையாக இணையம் தர வேண்டிய ரூ.7.29 கோடியையும் தள்ளுபடி செய்து அரசு ஆணை (G.O.Ms.No.33 Revene LD5 (1) Department, dated 23.01.2008 ) வழங்கப்பட்டுள்ளது.

**மாநில மற்றும் மைய அரசு திட்டங்கள்**

**மத்திய அரசு திட்டங்கள்**

**மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம்**

மத்திய அரசின் பெண்கள் மேம்பாட்டுத் துறையின் மூலம் கிராமப்புற நலிவடைந்த தாழ்த்தப்பட்ட / பிற்படுத்தப்பட்ட பெண்களின் முன்னேற்றத்திற்காக மகளிர் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசால் ரூ.649.464 இலட்சத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டு இதில் 90% பங்கு ரூ.584.518 இலட்சம் மத்திய அரசு மானியமாகவும் மீதமுள்ள 10% பங்கு ரூ.64.946 இலட்சம் நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் பங்களிப்பாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

\

இத்திட்டம், தமிழகத்தில் 14 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 7 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு இதுவரை ரூ.425.838 இலட்சம் அரசு மானியமாக முதல் மற்றும் இரண்டாம் தவணையாக விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு உள்ளது. மீதமுள்ள ரூ.158.680 அரசு மானியம் மூன்றாம் தவணையாக எதிர்பார்க்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 145 மகளிர் கூட்டுறவு சங்கங்களில் 10150 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, நாளொன்றிற்கு சராசரியாக 22,439 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு பயனாளி ஒருவருக்கு ரூ.61/– வருமானமாக கிடைக்கிறது.

**தீவிர பால் பெருக்குத்திட்டம்**

மத்திய அரசு, தீவிர பால்பெருக்கு திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ரூ.312.15 இலட்சத்தை 100 சதவிகித மானியமாக நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் பயன்பெறும். நடப்பு ஆண்டில் மத்திய அரசு மானியம் ரூ.102.14 இலட்சம் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்கங்களில் பால் உற்பத்தியை அதிகரித்தல், பால் விற்பனையை அதிகரித்தல், பாலை பதப்படுத்துதல் மற்றும் பால் சந்தையிடலுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், இடுபொருள் வசதிகளை ஏற்படுத்துதல், மனித வளமேம்பாடு வசதிகளை உருவாக்குதல், களப்பணிகளை விரிவுபடுத்தல், மனிதவளத்தை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

நடப்பு ஆண்டில், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த முறையே ரூ.554.06 இலட்சம் மற்றும் ரூ.291.77 இலட்சத்திற்கு, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முதல் தவணையாக முறையே ரூ.204.53 இலட்சமும் ரூ.49.83 இலட்சமும் முறையே திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஒன்றியங்களில் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மைய அரசு, இத்திட்டத்தின்கீழ் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகபட்டினம் மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட. கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ரூ.867.624 இலட்சத்திற்கு மத்திய அரசு 11.10.2007 அன்று ஒப்புதல் அளித்து முதல் தவணையாக ரூ. 210.284 இலட்சத்தில் ரூ.125.00 இலட்சம் விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக, 8 வருவாய் மாவட்டங்களிலுள்ள 849 சங்கங்களைச் சார்ந்த 2.24 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர். மேற்படி ஒன்றியங்களில் நாளொன்றிற்கு சராசரி பால் உற்பத்தி 1.31 இலட்சம் லிட்டர் மற்றும் பால் விற்பனை 1.17 இலட்சம் லிட்டர். தென் மாவட்டங்களில் 71 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டும், 54 செயலிழந்த சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டும் உள்ளன. 2518 கறவை மாட்டு கடன்கள் வழங்கப்பட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தரமான தூய பால் உற்பத்திக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

\

கிராமப்புறங்களிலிருந்து பெறப்படும் பால் தூய்மையானதாகவும், தரமானதாகவும் உள்ளதா என்பதை உறுதி செய்யும் பொருட்டு உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு தரமான தூய பால் உற்பத்திக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல் என்னும் திட்டத்தை உருவாக்கி உள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 100% மானியம் வழங்குகிறது. இத்திட்டம் இரண்டாண்டுகள் மற்றும் அதற்கு மேலும் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் குறிக்கோள், விவசாயிகளுக்கு தூய பால் உற்பத்தி குறித்து பயிற்சி அளித்தல், பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத்தடை திரவங்கள் (Antiseptic) வழங்குதல், ஒன்றியங்கள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்துதல், பாலின் முதன்மை தரத்தை அதிகரிக்க தேவைப்படும் மொத்த பால் குளிர்விப்பான்களை சங்கத்தில் நிறுவுதல் ஆகியவை ஆகும்.

இத்திட்டத்தின் வாயிலாக, விவசாயிகளுக்கு பயிற்சி, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் நுண்மத்தடை திரவம் வழங்குதல், பரிசோதனைக்கூடத்தை மேம்படுத்துதல், பால் குளிர்விப்பான்களை நிறுவுதல் திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகளுக்கு நிதி பயன்படுத்தப்படுகின்றது. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கு மட்டும் மத்திய அரசு 75% மானியம் வழங்குகின்றது. மீதமுள்ள 25% செலவினத்தை பயனாளி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ளும்.

இத்திட்டம் வேலூர், விழுப்புரம், திருச்சி, தர்மபுரி சேலம்,ஈரோடு, நீலகிரி, காஞ்சிபுரம்– திருவள்ளூர், மதுரை, நீலகிரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூ.1351.37 இலட்சம் செலவில் செயல்படுத்த, மைய அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசின் பங்கு ரூ.1102.45 இலட்சம் மற்றும் ஒன்றியங்களின் பங்கு ரூ.248.93 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் முதல் வருட நிதி உதவியாக, ரூ.445.15 இலட்சம் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் ஆண்டு நிதியுதவி ரூ.507.80 இலட்சம் மற்றும் முதல் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் உள்ள நிலுவை தொகை, ரூ.24.19 இலட்சம் ஆகியவை மத்திய அரசிடம் இருந்து எதிர் நோக்கப்படுகிறது.

**களவெளி ஜெர்சி கலப்பினப்பசு செயல்திறன் பதிவுத்திட்டம்**

களவெளி ஜெர்சி கலப்பினப்பசு செயல்திறன் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக, வேலூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பால் உற்பத்தியாளர்களிடையே உள்ள பசுக்களில், உயர்ந்த அளவாக நாளொன்றுக்கு 14 லிட்டருக்கும் அதிகமாக பால் கறக்கும் கறவைகளில், நோயற்ற கறவைகளை தேர்வு செய்து, உயர்ரக காளை விந்தினைக் கொண்டு கருத்தரிக்கச் செய்து, கன்று ஈன்றவுடன்,, அதன் பால் அளவை கணக்கிட்டு, அதிக பால் கறக்கும் கறவைகள் எதிர்வரும் காலங்களில் கலப்பின காளை கன்றுகள் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் தாய் பசுக்களாக தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

\

இத்திட்டத்தின் கீழ் 810 கறவைகளின் பால் அளவு பதிவு செய்து முடிக்கப்பட்டு உள்ளது. இக்கறவைகளின் மூலம் பிறந்த 62 காளைக்கன்றுகளில் 19 காளைக்கன்றுகள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலம் வளர்க்கப்பட்டு வருகின்றன.

**வம்சாவழி சோதனைத் திட்டம்**

வம்சாவழி சோதனைத் திட்டம் , மத்திய அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மரபுத் திறன் மிகுந்த காளைகளை தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 20 முதல் 25 கலப்பின பொலிகாளைகளின் விந்தை சேகரித்து, செயற்கை முறை கருவூட்டல் மூலம் வேலூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளை கருத்தரிக்கச் செய்து, அக்கறவைகளுக்குப் பிறந்த கிடாரிகளின், முதல் ஈற்று பால் அளவு, கொழுப்பு சத்து, இதர சத்து மற்றும் முதல் கன்று ஈனுகையில் அவற்றின் வயது போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குணநலன்களை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கலப்பின காளைகளில், அதிக பால் கொடுக்கும் மரபுத்திறனுடைய பொலிகாளைகள் இனப்பெருக்கத்திற்காக தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஜோடியின் கன்று ஈனும் திறன் 2007–08ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை காப்பீட்டுத் திட்டம்**

கால்நடை காப்பீட்டு திட்டம் மத்திய அரசின் 50% நிதி உதவியுடன், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக, இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007–08 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில், மொத்தம் 77,000 பசு மற்றும் எருமை கறவையினங்களை காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 72,886 கறவைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. மொத்த பிரிமியத்தில் 50% மானியமாகவும், மீதமுள்ள 50% உறுப்பினர்களாலும் வழங்கப்படும்.

**புனரமைப்புத் திட்டம்**

**மத்திய மாநில அரசுகளின் கூட்டுத் திட்டம்**

**“கூட்டுறவுகளுக்கு உதவுதல்”**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு “கூட்டுறவுகளுக்கு உதவுதல்” என்னும் திட்டத்தை, நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையங்களை சீரமைப்பதற்காகவும், மேலும் நட்டத்தைச் சரி செய்து இலாபகரமாக செயல்படுத்தவும் உருவாக்கியது.

இத்திட்டத்தின் கீழ், நட்டத்தில் செயல்படும் ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவற்றின் நட்டத்தைச் சரி செய்து கொள்வதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகள் சரி சமமாக 50% தொகையை மானியமாக வழங்கும்.

ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களைச் சார்ந்த 3 மாவட்டங்களில் இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஈரோடு ஒன்றியத்திற்கு ரூ.9 கோடியும், விழுப்புரம் ஒன்றியத்திற்கு

\

ரூ.4 கோடியும் நிதி உதவி அளிக்கப்பட்டது. தற்பொழுது விழுப்புரம், ஈரோடு ஒன்றியங்கள் இலாபத்தில் செயல்பட்டு பால் பணப்பட்டுவாடா நிலுவையை குறைத்துள்ளன. ஈரோடு ஒன்றியத்தில் உற்பத்தியாளர்களிடம் பிடிக்கப்பட்டு வந்த 50 பைசா பால்பணம் 10.03.2008 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

மத்திய / மாநில அரசுகள் கூட்டுறவுகளுக்கு உதவுதல் திட்டத்தின் கீழ், தர்மபுரி ஒன்றியத்தைப் புனரமைப்பு செய்ய ரூ.970.99 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசின் பங்கு ரூ.350 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.350 இலட்சமும் தர்மபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை ரூ.700 இலட்சமும் பால் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வழங்கப்பட்டு பால்பணம் பட்டுவாடா நிலுவை தொகையை குறைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. 2007–08 ஆம் ஆண்டிற்கு தமிழக அரசின் பங்கான ரூ.100 இலட்சம் ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பங்கான ரூ.100 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவுகளுக்கு உதவுதல் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் ஒன்றியத்திற்கு ரூ.180 இலட்சம் வழங்குவதற்கான கருத்துரு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மாநில அரசுத் திட்டங்கள்**

**சுனாமி அவசர உதவித் திட்டம்**

- 160 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. பால் கொள்முதல் செய்வதற்கு உறுதுணையாக துருவுறா எஃகினால் செய்யப்பட்ட கேன்கள், பால் சேகரிக்கும் கருவிகள், பால் பரிசோதனை கருவிகள், மரச்சாமான்கள், விளம்பர பலகை மற்றும் கணக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நாளொன்றிற்கு 9230 லிட்டர், பால் சுயஉதவிக் குழுக்களால் கொள்முதல் செய்யப்பட்டு கிராமங்கள் / ஒன்றியங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் தினசரி வருவாய் கிடைக்கிறது. ஆசிய வங்கியிடமிருந்து 100 சதவிகித மானியமாக வழங்கப்பட்ட ரூ.80 இலட்சத்தில் ரூ.31 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிவடையும்.
- 9 மொத்த பால் குளிர்விப்பான்கள், ஆசிய வங்கி நிதியுதவியுடன், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் வளர்ச்சி துறையின் சுனாமி திட்டம் மூலமாக ரூ.153 இலட்சம் செலவில் நிறுவப்படவுள்ளது.
- பால் விற்பனை பயிற்சி பெற்ற 37 சுயஉதவிக்குழுக்களுக்கு பாலகம் அமைத்து பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ரூ.169.39 இலட்சம் நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது. 14 சுய உதவிக் குழுக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டு பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை நடைபெற்று வருகின்றது. 3 சுயஉதவி குழு உறுப்பினர்கள் மூலம் பால் விற்பனை செய்யப்படுகிறது. ரூ.108 இலட்சம் பயன்படுத்தப்பட்டு எஞ்சிய தொகை விரைவில் பயன்படுத்தப்பட உள்ளது.
- ஈரோட்டிலிருக்கும் தேசிய பால்வள வாரியத்தின் பயிற்சி நிலையத்தில் மாவட்ட அளவில் சுனாமி திட்டத்தை செயல்படுத்தும் 49 அதிகாரிகள் மற்றும் அரசு சாராத அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு ரூ.1.79 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

\

- 641 உறுப்பினர்களுக்கு, விழிப்புணர்வு பயிற்சியும் 381 உறுப்பினர்களுக்கு தொழில் சார்ந்த பயிற்சியும், ஈரோடு மற்றும் சேலம் ஒன்றியத்தைச் சார்ந்த 377 சுய உதவிக்கழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, சேலம் மற்றும் ஈரோடு பால்பண்ணைகளில் பால் உபபொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் ரூ.4.31 இலட்ச செலவில் அளிக்கப்பட்டுள்ளது.
- சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த 660 உறுப்பினர்களுக்கு, தூய்மையான பால் உற்பத்தி மற்றும் கறவை மாடுகளின் வளர்ப்பு குறித்த பயிற்சியும் 3936 உறுப்பினர்களுக்கு சங்கங்களில் செயல்படுத்தக் கூடிய சிக்கன நடவடிக்கை குறித்தும் ரூ.5.30 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

**பகுதி–II திட்டம் 2007–08**

2007–08 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.418 இலட்சம், தமிழக பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறும் வகையில் நிதி உதவி அளிக்கப்பட்டது. இதுவே பகுதி–II திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகபட்ச நிதியாகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ.218 இலட்சம். மீதமுள்ள ரூ.200 இலட்சத்தை பயனாளி ஒன்றியங்கள் / சங்கங்கள் ஏற்கும்.

அ) ரூ.200 இலட்சம் செலவில் 5000 துருவுறா எஃகிலான கேன்கள், கேன் ஒன்று ரூ.4000 வீதம் கொள்முதல் செய்து 1000 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதில் ரூ.100 இலட்சத்தை, அரசு மானியமாக வழங்கியுள்ளது.

ஆ) துருவுறா எஃகிலான பால் சேகரிக்கும் தட்டு,, புனல், வடிகட்டி, அளவுகள், மாதிரி பாட்டில்கள் ஆகியவை அடங்கிய பெட்டி ஒன்று ரூ.6000 செலவில் 50 பெட்டிகள் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மொத்த விலை ரூ.3.00 இலட்சம் ஆகும்.

இ) 5000 லிட்டர் கொள்ளளவுள்ள 10 பால் குளிர்விப்பான்கள் சங்கங்களில் நிறுவப்படும். 10 பால் குளிர்விப்பான் விலை ரூ.200 இலட்சம் ஆகும். இதில் 100 இலட்சத்தை அரசு, மானியமாக வழங்கியுள்ளது.

ஈ) 10 கணினியுடன் கூடிய பால் எடைபோடும் கருவி ஒன்று ரூ.1.50 இலட்ச செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, 10 சங்கங்களில் நிறுவப்படவுள்ளது. மொத்த செலவு ரூ.15 இலட்சத்தையும் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

**திருவண்ணாமலை பால்பவுடர் தொழிற்சாலை**

நாளொன்றிற்கு 2 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் பால்பண்ணை மற்றும் 20 மெட்ரிக்டன் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை திருவண்ணாமலையில், நபார்டு வங்கி கடன் உதவியுடன் நிறுவ, அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.2931 இலட்சங்கள் ஆகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ.146.57 இலட்சம். எஞ்சிய தொகையை நபார்டு வங்கி கடனாக அளிக்கிறது. நடப்பு ஆண்டில் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் இதுவரை ரூ.1076.52 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

**தொலை நோக்கு திட்டம் – 2008–09**

**புதிய திட்டங்கள்**

\

1 <u>“பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணை திட்டம்”</u> தமிழ்நாட்டின் பால் உற்பத்தியை மேலும் பெருக்கவும், பால் உற்பத்தி செய்யும் விவசாய குடும்பங்கள் கூடுதல் வருவாய் பெறும் வகையிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10000 கலப்பினக் கறவை மாடுகள் வழங்கப்படும். இத் திட்டம் பால் உற்பத்தி செய்யத் தகுந்த 200 கிராமங்களில் 5000 மகளிர் பயன்பெறும்வகையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலமாக வரும் இரண்டு ஆண்டுகளில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2. பால் உற்பத்தியாளர்களின் நலனுக்காக <u>“பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பால் உற்பத்தியாளர் நல நிதி”</u> நடப்பு ஆண்டில் உருவாக்கப்படும். இந்த நல நிதிக்காக மாதந்தோறும் ஒவ்வொரு பால் வழங்கும் பால் உற்பத்தியாளரும் ரூ.1/–ம், சம்பந்தப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் ஒன்றியம் இரண்டும் சேர்ந்து ரூ.1/–ம் வழங்கவேண்டும். இந்த நிதி பால் வழங்கும் பால் உற்பத்தியாளர் விபத்தில் இறத்தல், ஊனமாதல் போன்ற காரணங்களால் பாதிப்புக்குள்ளாகி பால் வழங்குவதில் தடை ஏற்பட்டால், அவர் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கவும், பால் உற்பத்தியாளரின் பெண் குழந்தைகளுக்கு திருமண செலவுகள் மற்றும் குழந்தைகளின் படிப்பு செலவுகள் போன்றவற்றிற்காகவும் பயன்படுத்தப்படும்.

**புதிய சங்கங்கள் உருவாக்குதல் / செயலிழந்த சங்கங்களை செயல்படுத்துதல்**

2008–09 ஆம் அண்டில் 250 புதிய சங்கங்கள் பதிவு செய்யவும் 100 செயலிழந்த சங்கங்களை புத்துயிரூட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பால் கொள்முதல்**

2008–09 ஆம் ஆண்டில், சங்கங்களிலிருந்து நாளொன்றிற்கு 28 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**பால் விற்பனை**

சென்னை மாநகரில் 2008–09 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 10.30 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும், மாவட்ட ஒன்றியங்களில் நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பால் பதப்படுத்தும் திறனை அதிகரித்தல்**

2008–09 ஆம் ஆண்டில் அதிகப்படியான பால் பதப்படுத்துதல், பால் பைகளில் அடைத்தல் ஆகிய பணிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் அந்தந்த மாவட்ட ஒன்றியங்களில் உள்ள நிதி ஆதாரத்தை கொண்டு ரூ.2364 இலட்ச மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படவுள்ளது.

**மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுதல்**

2008–09 ஆம் ஆண்டில் 131 மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படவுள்ளன.

**பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி**

‘தூய பால் உற்பத்தி’ திட்டத்தின்கீழ் ரூ.37 இலட்சம் செலவில் 29600 பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். மேலும் ரூ.30 இலட்சம் செலவில் 8000 பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கறவை மேலாண்மை செயல்பாடுகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

**கால்நடை நலத் திட்டம்**

\

பால் உற்பத்தியாளர்களிடம் நிர்வாக செலவினமாகப் பிடிக்கப்படும் 10 பைசாவில், 2.5 பைசா கால்நடை மருந்து வாங்க பயன்படுத்தப்பட்டு, உற்பத்தியாளர்களின் கால்நடைகளின் மருத்துவச் செலவிற்கும் மற்றும் 100 நடமாடும் கால்நடை அமைப்புகளை உருவாக்கவும் பயன் படுத்தப்படும்.

**தொழில்நுட்ப பயிற்சி**

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க மாதவரத்தில் ஒரு தொழில்நுட்ப பயிற்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பகுதி–II திட்டம் 2008–09**

பகுதி – 2 திட்டத்திற்கான கீழே குறிப்பிட்டுள்ள பணிகள் ரூ. 110.85 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளன. இதில் ரூ. 22.00 இலட்சம் பயனாளிகள் பங்கு ஆகும்.

அ) 500 சங்கங்களுக்கு, 2000 துருவுறா எஃகிலான கேன்கள் ரூ.2200 வீதம் ரூ.44 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன. இதில் ரூ.22.00 இலட்சம் அரசு மானியமாகும். மீதி ரூ.22.00 இலட்சம் பயனாளிகள் பங்காகும்.

ஆ) 150 சங்கங்களுக்கு, ரூ. 6000 மதிப்புள்ள பால் சேகரிக்கும் உபகரணங்கள் ரூ.9.00 இலட்ச மதிப்பீட்டில் வழங்கப்படவுள்ளன. முழுத்தொகையும் அரசு மானியமாகும்.

இ) ரூ.60,000 மதிப்பில் 3 கோன் ஐஸ்கிரீம் இயந்திரங்களும், ரூ.25000 மதிப்பில் 3 பால்கோவா தயாரிக்கும் இயந்திரங்களும், ரூ.50000 மதிப்பில் 2 பன்னீர் தயாரிக்கும் இயந்திரங்களும், சங்கங்களுக்கு வழங்கப்பட உள்ளன. இதன் மொத்த மதிப்பீடான ரூ.3.50 இலட்சத்தை அரசு, மானியமாக வழங்கும்.

ஈ) ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில், 5 நடமாடும் கறவை இயந்திரம் சங்கங்களுக்கு வழங்கப்பட உள்ளன. இதில் ஒரு பால் கறவை இயந்திரம், மூன்று சக்கர வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும். மொத்த மதிப்பீடான ரூ.16.25 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்படும்.

உ) ஆணையர் அலுவலகத்தில், புதிய கணினி ஜெராக்ஸ் மற்றும் பேக்ஸ் இயந்திரங்களை நிறுவி ரூ.7.50 இலட்சம் அரசு மானியத்தில் மின்னணு தொடர்பகம் உருவாக்கப்பட உள்ளது.

ஊ) அரசு மானியம் ரூ.3.00 இலட்சத்தில், ஆணையர் அலுவலகத்தில் உள்ள பயிற்சி நிலையம் புதுப்பிக்கப்பட உள்ளது.

எ) பால்பண்ணையில் உள்ள 125 ஏக்கரில் அமைந்துள்ள பழத்தோட்டத்தில் அறுவடை செய்யப்படும் பழங்களை பாதுகாக்கவும், கருவிகள் வைத்துக்கொள்ளவும் ரூ.10.00 இலட்சம் அரசு மானியத்தில், புதிய கட்டடம் கட்டப்பட உள்ளது.

ஏ) பழத்தோட்டத்தில், நீர்பாசன வசதிகளை மேம்படுத்த ரூ.3.00 இலட்சத்தில் ஆழ்துளைகுழாய் கிணறு மற்றும் மோட்டார், அரசு மானியத்தில் அமைக்கப்பட உள்ளது.

ஐ)மாதவரம் பால்பண்ணையிலுள்ள புல்பண்ணையில், நான்கு இரும்பு கதவுகள் ரூ.1.60 இலட்சத்தில் அமைக்கப்படும்.

ஒ) நீலகிரி மாவட்டத்தில் ரூ.35 இலட்சம் அரசு மானியத்தில், பாலாடைக்கட்டி பாலிலிருந்து பிரித்தெடுக்கும் புரதசத்திலிருந்து 'வே' பானம் (Whey drink) தயாரிக்கப்பட உள்ளது.

**தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

\

11வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண் துறை 4% வளர்ச்சி அடைய தேசிய வளர்ச்சி கழகம், மத்திய அரசால் செயல் படுத்தப்படும் 'தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்' அல்லது 'தேசிய விவசாயிகள் நலத் திட்டம்' என்ற திட்டத்தை செயல்படுத்திவருகிறது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதியை மத்திய அரசு 100% மானியமாக வழங்கும்.

இத்திட்டத்தின்வாயிலாக கீழே கொடுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற அரசு ரூ.7.97 கோடி மானியமாக அளித்துள்ளது.

அ) எருமைக்கன்று வளர்ப்பு திட்டம் ரூ.1.62 கோடியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ) ஈரோடு மாவட்ட ஒன்றியத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சரிவிகித புரதச்சத்து உள்ள கால்நடை தீவனம் தயாரிக்கும் ஆலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ) ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஒன்றியங்களில், ரூ.30 இலட்சம் மதிப்பில் நுண்சத்து கலவை அலகினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஈ) பால்வளத்துறையின் கட்டுப்பாட்டில், மாதவரத்தில் தற்போது இயங்கி வரும் பரிசோதனை கூடத்தை, ரூ.222 இலட்சம் செலவில் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உ) 30 தானியங்கி பால் கறவை இயந்திரங்களை, ஒவ்வொன்றும் ரூ.70,000/– வீதம் ரூ 21.00 இலட்சம் மதிப்பில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஊ) 107 கணினியுடன் கூடிய எடை இயந்திரங்களை, ஒவ்வொன்றும் ரூ.1.69 இலட்சம் வீதம் ரூ181 இலட்சம் மதிப்பில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எ) ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில், விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்கள் திறமையை வளர்க்க தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமை மூலம் பயிற்சி அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏ) ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் பால் கூட்டுறவு சங்கங்களை சார்ந்த 550 விவசாயிகள், கல்வி சுற்றுலா செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை 01.10.1987 அன்று தொடங்கப்பெற்றது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் 9259 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் கணக்குகளைச் சட்டப்பூர்வமாகத் தணிக்கை செய்யும் பொறுப்பு இத்துறையைச் சார்ந்தது. இத்துறையில் 304 பணியாளர்கள் அயற்பணியில் (அதாவது கூட்டுறவுத் துறை, கருவூல கணக்குத்துறை மற்றும் நிதித்துறை) பணிபுரிந்து வருகின்றனர்.

**அரசு வருவாய்**

நிதி ஆண்டில் தணிக்கைக் கட்டணம் மொத்த கேட்பு ரூ.199.35 இலட்சம் ஆகும். இத்தொகையில் ரூ.195.88 இலட்சம் இதுவரையில் வசூலிக்கப்பட்டுள்ளது. அடிப்படைவிதிக் கட்டணம் மொத்த கேட்புத் தொகை ரூ.87.29 இலட்சங்கள் ஆகும். இதில் ரூ.84.58 இலட்சங்கள் இதுவரையில் வசூல் செய்யப்பட்டுள்ளது.

உ. மதிவாணன்,
பால்வளத்துறை அமைச்சர்.

\